# 1 முஸ்லீம் கர்ணன்+ 4 இந்து கர்ணன்கள்

கட்டுரையாளர்:- லண்டன் சுவாமிநாதன்;

கட்டுரை எண்-766 date 30/12/2013

**கர்ணன், சுகர்ணன், கண்டாகர்ணன், கும்பகர்ணன், விகர்ணன்**:-- 5 **கர்ணன்களின் கதை**

கர்ணன் என்றாலே போராடப் பிறந்தவர்கள் என்றுதான் தோன்றுகிறது. இந்து மதத்தில் 4 கர்ணன்களும், முஸ்லீம் மதத்தில் ஒரு கர்ணனுமாகச் சேர்த்து ஐந்து கர்ணன்களை நாம் அறிவோம். அவர்கள் பணியையும் போராட்டத்தையும் சிறிது அலசி ஆராய்வோம். இதுதவிர இலங்கை லம்பா சகர்ணன், நேபாள லம்பா / கண்டா கர்ணன், கேரள கண்டா கர்ணன் என்று மேலும் பல கர்ணன்கள் உண்டு!!!

முதலில் முஸ்லீம் கர்ணன் பற்றிய சுவையான விஷயத்தைக் காண்போம். உலகிலேயே மிகப் பெரிய முஸ்லீம் நாடு இந்தோநேஷியா. ஒரு காலத்தில் இந்து சாம்ராஜ்யமாகத் திகழ்ந்தது. “ **முஸ்லீம் நாட்டில் இந்து அற்புதங்கள்**”–என்ற நீண்ட ஆங்கிலக் கட்டுரையில் ஏற்கனவே இது பற்றி விரிவாக எழுதிவிட்டேன்.

இந்தோநேஷியாவின் முதல் ஜனாதிபதி சுகர்ணோ (சு+ கர்ணன்). இவருடைய தாயார் ஒரு பிராமணப் பெண். இந்தோநேஷியாவில் இன்னும் இந்து மாநிலமாகத் திகழும் பாலி தீவில் பிறந்தவர். தந்தையோ முஸ்லீம். ஆனால் மஹா பாரதத்தில் உயிர். தனது மகனுக்கு சு+ கர்ணன்= நல்ல கர்ணன் என்று பெயரிட்டார். கர்ணன், எவ்வளவு பெரிய கொடையாளி ஆனாலும் கெட்டவர்கள் சகவாசம் அவனை வீ ழ்த்திவிட்டதுஆகையால் சு+கர்ணன் என்று பெயரிட்டார்.

இதுபற்றி தனது சுயசரிதையில் சுகர்ணோவே கூறுகிறார்:

“ எனக்கு குஸ்னோ என்று முதலில் பெயர். சிறுவயதில் மலேரியா, வயிற்றுக் கடுப்பு இன்னும் எத்தனையோ வியாதிகள் என்னைப் பற்றின. எல்லா வியாதிகளும் ஒன்றுவிடாமல் வந்தன. என் அப்பா நினைத்தார். இந்தப் பையனுக்கு புதுப் பெயர் சூட்டினால்தான் இவன் உருப்படுவான் என்று எனக்கு இன்னும் மீசை கூட முளைக்க வில்லை. ஒரு நாள் என் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு, ‘டேய், மகனே, இன்று முதல் உன் பெயர் கர்ணன். மஹாபாரதத்தில் பெரிய வீரன் என் மகன் ஒரு வீரனாக தேசபக்தனாகத் திகழ வேண்டும் என்பது என் நீண்ட நாளைய கனவு. நீ இரண்டாவது கர்ணன்”–என்றார்.

சுகர்ணோ தனது சுயசரிதையில் இன்னும் ஒரு சுவையான சம்பவத்தையும் கூறிகிறார். நல்ல முஸ்லீம் ஆகிய அவர் தந்தை, இந்து தர்ம உபநிஷத்தில் எவ்வளவு கரைகண்டவர் என்பதை இந்த சம்பவம் காட்டும்:

“ எனது அப்பா ஒரு பள்ளிக்கூட வாத்தியாருக்கே உரித்தான கடுமையான ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிப்பவர். நான் சிறுவயதில் நிறைய விஷமம் செய்வேன். நல்ல அடி, உதையும் வாங்குவேன். ஒரு நாள் வீட்டுத்தோட்டத்தில் உள்ள நாவல் மரத்தில் ஏறினேன். ஒரு பறவையின் கூட்டைக் கீழே தள்ளிவிட்டு வேடிக்கை பார்த்தேன். எனது தந்தை விரைந்து வந்தார். ‘உனக்கு எத்தனை முறை சொன்னேன், எத்தனை முறை சொல்லுவது? “ தத் த்வம் அஸி, தத் த்வம் அஸி” என்று, (இது மிகப் பெரிய உபநிஷத தத்துவம்: நீயே அதுவாக இருக்கிறாய்–அதாவது நீயே கடவுள்). அப்பா போட்ட சப்தத்தில் என் சப்த நாடியும் ஒடுங்கிப்போனது.

பயந்து கொண்டே ஆமாம் அப்பா. 'எல்லாம் கடவுள்' என்று நீங்கள் சொல்லிக் கொடுத்தீர்கள் என்றேன். போய்விட்டார்."

பாரதியும் இதைப் பாடி இருக்கிறார்:

"பூமியிலே வழங்கிவரும் மதத்துக்கெல்லாம்

பொருளினை நாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்

சாமி நீ சாமி நீ கடவுள் நீயே

தத்வமஸி தத்வமஸி நீயே அஃதாம்-- (பாரதியார் பாடல்கள்)

சுகர்ணோவுக்கு முஸ்லீம் தர்மப்படி ஒன்பது மனைவிகள்! ஹாலந்து நாட்டில் இருந்து இந்தோநேஷியாவை விடுவித்த சுதந்திரப் போராட்ட வீ ரர் அந்த நாட்டை 21 ஆண்டுகளுக்கு ஆண்டார். மகளின் பெயரும் மஹாபாரதப் பெயர்தான். மேகவதி சத்தியவதி சுகர்ணோ புத்ரி. இந்த அழகான சம்ஸ்கிருதப் பெயரில் 'சத்யவதி' என்பது மஹாபாரத கதாபாத்திரம். சுகர்ணோ புத்ரியும் இந்தோநேஷியாவின் ஜனாதிபதியாக பதவிவகித்தார். நடைமுறையில் அவர் முஸ்லீம். இவர்கள் எல்லோரும் இந்தியாவின் ஆப்த நண்பர்கள். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி ஆகியோரின் நண்பர்கள்.

இனி இந்து மத கர்ணன்களின் கதைகள்:

**கண்டா கர்ணன்:** ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கண்டா கர்ணன் கதையைச் சொல்லி 'வெறிபிடித்த பக்தனாக' இருக்காதே என்று சொல்கிறார். கண்டா கர்ணன் பெரிய சிவ பக்தன். "சிவனோடுக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்ற கொள்கை உடையோன். இதில் தவறேதும் இல்லை. ஆனால் மற்ற தெய்வங்களைக் குறைகூறி வந்தான். சிவனே இவன் முன் தோன்றி,

‘அப்பனே அப்படிச் செய்யாதே’ என்று சொல்லிப் பார்த்தார். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது.

என்ன இருந்தாலும், நம் பக்தன் ஆயிற்றே என்று எண்ணீ ய சிவ பெருமான் மீண்டும் வந்தார். இப்போது ஹரிஹரனாக, சங்கர நாராயணனாக ( Two in One 2 இன் 1) வந்தார். அந்த மூடனுக்கு இப்போதும் புத்தி வரவில்லை. சிவன் பக்கத்துக்கு மட்டும் தீவாரதனை காட்டினான். ஊதுபத்தியை முகர்ந்துவிடக் கூடாதென்பதற்காக நாராயணன் மூக்கைப் பிடித்து அவரை மூச்சுத் திணறடித்தான். ‘நீ வாழ்நாள் முழுவதும் இதற்காக கஷ்டப் படப் போகிறாய்’ என்று சொல்லிவிட்டு சிவபெருமான் கடையைக் கட்டினார்.

நாளடைவில் கண்டா கர்ணன் ஒரு கிராமத்தில் குடிபுகுந்தான். யாரவது விஷ்ணு, நாராயணன் என்ற பெயர்களைச் சொன்னால் காதைப் பொத்திக்கொண்டு ‘சிவ சிவ’ என்று கூச்சலிட்டான். கிராமத்துச் சிறுவர்களுக்கு ஒரே குஷி! எப்போது பார்த்தாலும் இவன் வீ ட்டுவாசலில் நின்று ‘நாராயண, நாராயண’ என்று கோஷம் போட்டனர். இதற்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று எண்ணிய கண்டா கர்ணன், காதுகளில் இரண்டு பெரிய மணிகளைக் கட்டிகொண்டான. சிறுவர்கள் கோஷம் போட்டால் உடனே மணியை அடித்து அதைக் கேட்காமல் இருப்பான். சிறுவர்களுக்கு மேலும் சந்தோஷம்!! மேலும் மேலும் கோஷம் போட்டு அவன் வாழ்நாளையே நரகம் ஆக்கிவிட்டனர். அவன் பெயரே “மணிக் காது = கண்டா கர்ணன்” என்று மாறிவிட்டது. ஒரிஜினல் பெயரே இன்றுவரை யாருக்கும் தெரியாது!!!

**விகர்ணன்** என்பவன் திருதராஷ்டிரனுக்குப் பிறந்த நூற்றுவரில் ஒருவன். தீயவனான துரியோதனின் தம்பி. கௌரவர்களில் மற்ற எல்லா தம்பிகளும் கொடியவர்கள். இவன் ஒருவன் மட்டும் நடுவு நிலை தவறாதவன். துரியோனன், துச்சாதனன் போன்றவர்கள் அடாத பாவச் செயல்களைச் செய்தபோது தடுத்தவன் இவன் தான். இருந்தபோதிலும் அவனது சகோதரர்கள் இவனைப் பொருட்படுத்தவே இல்லை.

**கர்ணன்**: மஹாபாரத கர்ணன் பற்றி அறிமுகமே தேவை இல்லை. உலகம் அறிந்த கொடையாளி. நேர்மையின் சின்னம். இந்த இரண்டு குணங்களும், தீயோர் சேர்க்கையும் அவனை வீ ழ்த்திவிட்டன அவனது நேர்மையை அவனது தாய் குந்தியும் துர்யோதனனும் பயன்படுத்திக் கொண்டனர். அவனது கொடைத் தன்மையை கண்ணனும் இந்திரனும் பயன்படுத்திக் கொண்டனர். கௌரவர்களுக்குச் சார்பாகப் போராடிய ஒரு குற்றத்தைத் தவிர வேறு ஏதும் அறியாத புண்ய ஆத்மா.

**கும்பகர்ணன்** ராமாயணத்தில் வரும் ராவணன் தம்பியான **கும்பகர்ணன்** கதையும் இதேதான். குடித்தும், சாப்பிட்டும், உறங்கியுமே வாழ் நாளைக் கழித்த ஒரு விநோதப் பேர்வழி. ஆயினும் குணத்தில் நல்லவன். சீதையை ராமனிடம் ஒப்படைக்கும் படி எவ்வளவோ அறவுரை கூறியும் அது, செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது. இறுதியில் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக அண்ணன் இராவணன் தரப்பில் போராடி உயீர் நீத்தான். கும்பகர்ணன் வாய் குளறி தவறான வரம் கேட்ட கதை, நீண்ட தூக்கம் தூங்கும் அதிசய மனிதர்கள் பற்றிய மருத்துவ ஆராய்ச்சி ஆகியவற்றை இரண்டு நீண்ட ஆங்கிலக் கட்டுரைகளில் எழுதி இருக்கிறேன்.( I have already  given the story of Kumbakarna in my posts “Medical Evidence for Kumbakarna’s Long Sleep” and “Do Words have Power?”)

**லம்பாகர்ணன்** :

இலங்கையை 360 ஆண்டுகளுக்கு ஆண்ட லம்பாகர்ண வம்சம் வட இந்திய மூலம்  உடையவை. காதுகளில் நீண்ட துளை இட்டு ‘தொங்கட்டான்’ முதலிய ஆபரணங்களை அணிந்ததால் இந்தப் பெயர். நேபாளத் தலை நகரான காத்மாண்டுவில் லம்பாகர்ண பட்டர் கட்டிய லெட்சுமி கோவில் இருக்கிறது. கேரளத்தில் கண்டாகர்ணன் (சிவன்) கோவில்கள் இருக்கின்றன. நேபாளத்தில் கண்டாகர்ணன் என்னும் அசுரனின் கொடும்பாவியை எரிக்கும் விழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்

படுகின்றன. சமண மதக் கடவுளரில் ஒருவர் பெயர் கண்டாகர்ண மஹாவீ ரன் இப்படி எத்தனையோ கர்ணன்கள். நேரம் கிடைக்கும்போது எனது மற்ற ஆய்வு முடிவுகளை எழுதுவேன்.

எனது 700 க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகள் பற்றி அறிய தொடர்பு முகவரி: Contact swami_48@yahoo.com

Pictures are used from different sites; thanks.